بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

December 20 2013

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

## சுய சீர்திருத்தமும், தீய பழக்கங்களை கைவிடுதலும்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது மேற்கோள்களிலிருந்து விளக்கிக் கூறியவாறு செயல் சீர்திருத்தம் ஏற்படுவதற்குத் தடையாக இருக்கின்ற இரண்டு காரணங்களைக் கூறியிருந்தேன். இதற்கான மற்ற காரணங்களைப் பற்றி இன்று கூறுகிறேன்.

செயல் சீர்திருத்தம் ஏற்படுவதில் தடையாக இருக்கின்ற **மூன்றாவது காரணம்,** உடனடியாக நிறைவேறுகின்ற அல்லது அருகில் தென்படுகின்ற விவகாரங்களைக் கருத்தில் கொள்வதாகும். ஆனால் கொள்கையோடு தொடர்புடைய விவகாரங்கள் மிகத் தொலைவில் உள்ளவையாக உள்ளன. அத்தகு விவகாரங்களுக்கு அதிகமாக மறுவுலக வாழ்வுடன் தொடர்பு இருக்கின்றது.

நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்றே செயலுடன் தொடர்புடைய விவகாரங்கள் உடனடியாக செய்ய வேண்டியவையாக இருக்கும். இவை எத்தகைய விசயங்கள் என்றால், இதற்கு கொள்கையுடன் எவ்வித தொடர்பும் இல்லை என்று பொதுவாக மனிதன் கருதுகின்றான். நான் ஏதேனும் தவறான செயலைச் செய்தால், அதனால் இறைவன் ஏகனாக இருக்கின்றான் என்ற கொள்கையில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று அவன் கருதுகின்றான். உதாரணமாக பொற்கொல்லனை எடுத்துக் கொள்வோம். நான் தங்கத்தில் வேறொரு பொருளைக் கலந்து விட்டால், இதனால் நான், ஓரிறைவனை நம்புவதில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று அவன் கருதுகின்றான். ஆனால், இதனால் நான், அதிகமாக சம்பாதித்து விடுவேன். நான் விரைவாக அதிகமான தொகையைப் பெறுபவனாக ஆகி விடுவேன் என்று அவன் நினைக்கின்றான். எனவே, அவன் மிக அருகில் அவனுக்கு கிடைக்கும் பலனைப் பார்த்து எத்தகைய வழிமுறையை கடைபிடிக்கின்றான் என்றால், அது ஒழுக்கச் சீர்குலைவாக மட்டும் இருப்பதில்லை. மாறாக அது ஏமாற்று வேலையாகவும் இருக்கின்றது. இதற்காகவே அவன் இந்த செயலை செய்துள்ளான். இதனால் அவனது கொள்கையில் எந்த வித்தியாசமும் ஏற்படாது என்று அவன் கருதுகின்றான். அதனோடு இதற்கு எந்த தொடர்பும் இல்லை என்று நினைக்கின்றான்.

பெரும் பெரும் ஹாஜிகளை நாம் பார்க்கின்றோம். வியாபாரத்தில் அவர்கள் பிறரை ஏமாற்றுகின்றனர். ஆனால் நாங்கள் ஹாஜிகளாக இருக்கின்றோம் என்பதில் அவர்கள் பெருமை கொள்கின்றனர். இவ்வாறு ஏமாற்றும்போது அவர்கள் மரணத்திற்குப் பிறகும் ஓர் வாழ்வு நமக்கு இருக்கின்றது என்பதை மறந்து விடுகின்றனர். அல்லது அதற்கு அவர்கள் எந்த முக்கியத்துவமும் வழங்குவதில்லை. இந்த உலகில் அவர்கள் செய்யும் செயல்கள் மரணத்திற்குப் பிறகு அவர்களுக்கு இருக்கும் வாழ்வின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். அவ்வாறே நபிக்கு வழங்கப்பட்டுள்ள போதனைக்கேற்ப செயல்படுவது பலன் அளிக்கக்கூடியதாக இருக்குமா? அல்லது இரட்சிப்பு யாருக்கு கிடைக்கும்? போன்ற கேள்விகள் மனிதனுக்கு பொதுவாக மிகத் தொலைவில் உள்ள விசயங்களாகத் தெரிகிறது. உள்ளத்திலும் மூளையிலும் ஆதிக்கம் செலுத்துகின்ற **அசல் விசயம், உடனடியாக கிடைக்கின்ற பலன் அல்லது உடனடியாக ஏற்படும் நிம்மதி** ஆகும். இதன் காரணமாகவே பொற்கொல்லன் தங்கத்தில் கலப்படம் செய்கின்றான். வெள்ளியை நிறுக்கும் போது எடையைக் குறைத்து விடுகின்றான். கடைக்காரரும் பொருள்களில் கலப்படம் செய்கின்றார். தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் மாடலுக்கு ஒரு பொருளைக் காட்டி விட்டு, அதை விட தரம் தாழ்ந்துள்ள பொருள்களையே கொடுக்கின்றனர். குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் இந்த விசயம் பொதுவானதாக ஆகிவிட்டது.

எனவே செயலைச் சீர்திருத்தும் வழிகளில் உலகத் தேவைகள் குறுக்கிடுகின்றன. ஏமாற்று வேலை, பொய், சூழ்ச்சி ஆகியவற்றின் மூலமாக உடனடியாக கிடைக்கின்ற பலன் மிகத் தொலைவில் அவருக்கு ஏற்படும் இழப்பைப் பற்றிய எண்ணத்தை அவரது மூளையை விட்டும் வெளியேற்றி விடுகின்றது. இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சில உதாரணங்களையும் கூறியுள்ளார்கள். உதாரணமாக, புறம் பேசுவது ஒரு மிகப்பெரும் பாவமாகும். ஒரு மேலதிகாரி தனக்கு கீழே பணிபுரியும் ஒருவருக்கு துன்பம் தருகின்ற போது, கொடுமையிழைக்கின்ற போது அந்த அதிகாரிக்கு கீழே பணிபுரியும் நபரால் எதுவும் செய்ய முடியாது. தற்செயலாக கீழே பணிபுரியும் அந்த நபருக்கு, தனது இந்த அதிகாரிக்கும் மேலதிகாரியாக இருப்பவருடன் சந்திப்பு ஏற்பட்டு விடுகின்றது. அப்போது அந்த பெரிய அதிகாரி இந்த அதிகாரிக்கு எதிராக சிலவற்றைக் கூறுகின்றார். எந்த நபருக்கு தனது அதிகாரியால் துன்பம் ஏற்பட்டதோ அவர், எந்த சந்தர்ப்பத்தை நான் தேடிக் கொண்டிருந்தேனோ அது எனக்கு கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சி அடைகின்றார். தனக்கு கஷ்டம் கொடுத்த அந்த மேலதிகாரிக்கு எதிராக எத்தகு விசயங்களைப் பேசுகின்றாரென்றால், அவரது குறைகளை எந்த அளவுக்கு எடுத்துக் கூறுகின்றார் என்றால், அந்த பெரிய அதிகாரி இந்த அதிகாரி மீது இன்னும் அதிகமாக வெறுப்படைகின்றார். இதற்காக உண்மை அல்லது பொய் என்று எதை வேண்டுமானாலும் அவர் கூறுகின்றார். அதன் மூலம் அவரை பழிவாங்க எண்ணுகின்றார். அப்போது அவருக்கு இந்த எண்ணம் வருகின்றது. அதாவது இன்று நான் புறம் பேசாமல் இருந்திருந்தால் எனது உயிருக்கும் செல்வத்திற்கும் உள்ள அபாயம் விலகாது. இதனால் தயக்கமின்றி அவர் புறம் பேசுகின்ற தீமையைச் செய்கின்றார். அதன் மூலமாக இந்த உலகப் பலன்களைப் பெறுகின்றார். உலகப் பலன்களைப் பெறுவதற்காக மனிதன் தீமைகளைச் செய்கின்றான்.

செயல் சீர்திருத்தத்தில் பலவீனம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்ற **நான்காவது விசயம்**, செயலுக்குப் பழக்கத்துடன் தொடர்பு இருக்கின்றது. பழக்கத்தின் காரணமாக பலவீனங்கள் ஏற்பட்டு விடுகின்றன. குறிப்பாக மதத்துடன் அரசாங்கம் இல்லாமல் இருக்கும் போது இவை ஏற்படுகின்றன. அதாவது அரசின் சட்டங்களின் காரணமாக சில செயல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு விடுகின்றது. இதனால் இஸ்லாத்தில் எந்த விசயங்களை ஒழுக்கச் சீர்குலைவு என்று கூறப்படுகின்றனவோ, மேலும் அவற்றை சீர்திருத்துவதன் பக்கம் இஸ்லாம் கவனமூட்டுகின்றதோ அவற்றைப் பேணுவதில் இஸ்லாமிய நாடுகளில் நீதி இல்லாமல் போய் விட்ட காரணத்தால் இரட்டை வேடம் போடும் நிலை இருப்பதால், இஸ்லாமிய அரசு இருந்தும் கூட, இஸ்லாமிய நாடுகளில் கூட செயலின் நிலை கவலை அளிக்கக்கூடியதாக இருக்கின்றது. இஸ்லாமிய நாடுகளல்லாத பிற நாடுகளில் எந்த சில விசயங்களில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டியது அவசியமானதாக இருக்கின்றதோ அதனை அந்த நாட்டில் உள்ளவர்கள் தீய செயலாகவும், ஒழுக்கச் சீர்குலைவாகவும் கருதுவதில்லை. எனவே இந்த சில விசயங்களில் செயல் சீர்திருத்தம் ஏற்பட முடியாது.

எனவே செயல் சீர்திருத்தத்தில் அரசாங்கத்திற்கும் ஒரு பங்கு இருக்கின்றது. எங்கு மதம் மற்றும் அரசு ஆகியவற்றின் பார்வையில் செயல் சீர்திருத்தம் என்பதன் விளக்கம் ஒன்றுபோல் இருக்கின்றதோ, மேலும் செயல் சீர்திருத்தமும் அதற்கேற்ப இருக்கின்றதோ அங்கு பழக்கத்திலுள்ள விசயங்களைச் சட்டம் மூலம் முடிவுக்கு கொண்டு வர முடியும். ஆனால் எங்கு அரசின் சட்டம் செயல் சீர்திருத்தத்திற்கு உதவாமல் இருக்கின்றதோ அங்கு பழக்கத்தில் உள்ளவற்றை மாற்ற முடியாது. செயல் அளவிலுள்ள பலவீனங்கள் சமுதாயத்தில் புரையோடி புண்ணாக ஆகி விடுகின்றது. உதாரணமாக, சுதந்திரம் என்ற பெயரில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் பல்வேறு செயல் அளவிலுள்ள பலவீனங்களை நாம் பார்க்கின்றோம். மேலும் எலக்ட்ரானிக் மீடியா மூலமாக செயல் அளவிலான பலவீனங்கள் உலகில் எல்லா இடங்களிலும் பரப்பப்படுகிறது. அத்தகைய சுற்றுச்சூழலில் வளர்ந்தவர்கள் அந்த சுற்றுச்சூழலின் ஒரு பகுதியாக இருப்பதால் தொடர்ந்து சில விசயங்களைப் பார்ப்பதன் காரணமாக தங்களது பழக்கவழக்கத்தின் காரணமாக சில பலவீனமான செயல்களைச் செய்கின்றனர். அதைப் பற்றி அறிந்தோ அறியாமலோ சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோரிடத்தில் இந்த பலவீனங்கள் வந்து விடுகின்றது. இந்த பழக்கம் உறுதியானதாக ஆகி விட்டால் பிறகு அதை விடுவது கடினமானதாக ஆகி விடுகின்றது.

உதாரணமாக, போதைப் பொருள்களை உபயோகிக்கும் பழக்கம் ஒருவருக்கு ஏற்பட்டு விட்டால் அதை விட்டு விடுவது கஷ்டமாகும். ஒரு நபர் இந்த தியாகத்தைச் செய்து விடுவார். அதாவது மூன்று இறைவன் உள்ளான் என்பதற்குப் பதிலாக ஓர் இறைவனை ஏற்றுக் கொள்வார். இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுக் கொண்ட பிறகு மறுநாளே அவருக்கு ஓர் இறைவன் என்பதற்குப் பதிலாக அந்த இடத்தில் மூன்று இறைவன்களைப் பற்றிய எண்ணம் ஒருபோதும் வராது. ஆனால் போதைப் பொருள்களை உண்பவரது உள்ளத்தில் போதைப் பொருள் கிடைக்க வேண்டும் என்ற விருப்பம் கண்டிப்பாக உருவாகும். முழு வாழ்நாளும், தான் பின்பற்றி வந்த ஒரு கொள்கைளை ஒரு மனிதனால் கைவிட்டு விட முடியும். ஆனால் சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் வரை இருந்து வரும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தும்

பழக்கமானது அந்த போதையில் சிறிதளவு குறைவு ஏற்பட்டு விட்டாலும் கூட அவரை நிம்மதியற்றவராக ஆக்கி விடுகின்றது. சிகரெட் குடிப்பவர்களில் சிலர் தமது குடும்பங்களை விட்டு விட்டு, தங்களது சகோதர, சகோதரிகளை விட்டு விட்டு, தங்களது பெற்றோர்களை விட்டு விட்டு, தங்களது மனைவி மக்களை விட்டு விட்டு ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். அஹ்மதிகளாவதற்காக தியாகங்களைச் செய்தனர். ஆனால் சிகரெட் குடிப்பதை விட்டு விடுங்கள் என்று அவர்களிடம் கூறினால், அவர்கள் அதனை நியாயப்படுத்துவதற்கு நூற்றுக்கணக்கான சாக்குப் போக்குகளைத் தேடுகின்றனர். சிலருக்கு இதை விட்டு விடுவதால் வயிறு பெரிதாகி விடுகிறது. சிலருக்கு இதனால் தூக்கம் வருவதில்லை. சிலருக்கு அவரது எண்ணப்படி சிந்திக்கின்ற புரிகின்ற ஆற்றலே இல்லாமல் போய் விடுகின்றது. இதற்காக அவர்கள் நிம்மதியிழந்த நிலையில் இருப்பார்கள். இது அஹ்மதிய்யத்தில் நுழைந்தவர்களது நிலை மட்டுமல்ல. ஒவ்வொரு நபருக்கும் இந்த நிலை ஏற்படுகின்றது. சிலர் பல நல்ல பணிகளைச் செய்கின்றனர். மிகவும் தியாகம் செய்தவாறு அவற்றைச் செய்கின்றனர். ஆனால் தன்னிடம் இருக்கின்ற இந்த சிறிய பழக்கத்தை அவரால் கைவிட முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார்கள். எங்களது ஒரு பெரிய தந்தை இருந்தார். அவர் நாத்திகராகவும், மார்க்கமற்றவராகவும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவர்களது நண்பர்கள் வருவதுண்டு. அந்த நண்பர்களில் சிலருக்கு ஹுக்கா குடிக்கின்ற பழக்கம் இருந்து வந்தது. அங்கு ஹுக்கா கிடைப்பதில்லை. ஆனால் இந்த பெரிய தந்தையிடம் எப்போதும் எல்லா சமயத்திலும் ஹுக்கா இருந்து வந்தது. அவருக்கு வேறு பல போதைப் பொருள்களின் பழக்கமும் இருந்தது. ஹுக்கா குடிக்கக்கூடிய இந்த நண்பர்கள் இவரிடம் செல்வர். ஹுக்காவினால் ஏற்படும் போதை காரணமாக அவர் கூறுகின்ற வீணான அநாவசியமான விசயங்களை வேறு வழியில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். அந்த பெரிய தந்தையிடம் ஒருமுறை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எப்போதாவது நீங்கள் தொழுததுண்டா? என்று கேட்டார்கள். இதுதான் அவரது நிலையாகும். அதற்கு அவர் சிறு வயதிலிருந்தே எனது இயல்பு எப்படி இருந்ததென்றால் எவராவது தங்கள் தலையை கீழே குனிவதைப் பார்த்தால் எனக்கு சிரிப்பு வர ஆரம்பித்து விடும் என்றார்கள். அவர் கூற வந்த கருத்து ஒருவரை ஸஜ்தா செய்யும் நிலையில் நான் பார்த்தால், அவர் தொழுவதைப் பார்த்தால் அப்போதிருந்தே நான் அவரை பரிகாசம் செய்து வந்தேன் என்பதாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த நண்பர்கள் இந்த பெரியப்பா அவர்களிடம் செல்வார்கள். ஹுக்கா குடிக்கும் பழக்கம் இருந்ததால் வேறு வழியின்றி இஸ்லாத்திற்கு எதிராகவும் ஜமாஅத்திற்கு எதிராகவும் அவர் கூறும் விசயங்களை இவர்கள் கேட்க வேண்டியது வந்தது. அதனை அவர்கள் கேட்டனர். ஒருமுறை ஒரு நண்பர் அங்கு சென்றார். பிறகு தன்னைத்தானே ஏசியவாறு அங்கிருந்து வெளியில் வந்து விட்டார். அப்போது யாரோ ஒருவர் என்ன நடந்தது? என்று கேட்டார். அதற்கு அவர் இந்த ஹுக்கா என்ற சாபத்தின் காரணமாக எனது நஃப்ஸ் எத்தகைய விசயங்களை என்னை வலுக்கட்டாயமாக கேட்க வைத்ததோ அவற்றை பொதுவான நிலைமைகளில் ஒருபோதும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறினார்கள். எனவே சில பழக்கங்கள் சில நேரங்களில் மனிதனை மிகவும் இழிவுபடுத்தி விடுகிறது.

சிலருக்கு பொய் சொல்கின்ற பழக்கம் இருக்கின்றது. அவருக்கு பலமுறை எடுத்துக் கூறினாலும், கண்காணித்து வந்தாலும் அவர்கள் பொய் சொல்வதிலிருந்தும் விலகுவதில்லை. அவர்களை சீர்திருத்துவது கடினமாகும். சீர்திருத்தம் நடக்கவே முடியாது என்பதல்ல. சீர்திருத்தம் ஏற்படவே முடியாது என்றால் அவருக்கு ஏன் நாம் புரிய வைக்கின்றோம்? அதன் தேவை என்ன வந்தது? ஆனால் பிறகு நாம் தொடர்ந்து அவருக்கு இதுபற்றி புரிய வைக்கின்றோம். போதனைகள் செய்யப்படுகின்றன. அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை ஆகும். ஈமானின் ஒரு சிறிய பொறி அவரிடம் இருந்தால் கூட போதனை அவருக்கு பயனளிக்கும் என்றே அல்லாஹ் கூறுகின்றான்.

ஒரு நபருக்கு எப்போதும் எல்லா விசயத்திலும் கெட்ட வார்த்தைகளால் ஏசிப் பேசுகின்ற பழக்கம் இருந்தது. சில நேரங்களில் நான் பிறரை ஏசுகின்றேன் என்பது கூட அவருக்கு தெரியாது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் ஒருவர் இவரைப் பற்றி புகார் கொடுத்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவரை அழைத்து இதைப் பற்றி அவரிடம் கேட்ட போது, நீங்கள் கெட்ட வார்த்தைகளால் பிறரை ஏசுகின்றீர்கள் என்று நான் கேள்விப்பட்டேன் என்று அவர்கள் கூறியதுமே அவர் கெட்ட வார்த்தை கூறி ஏசி விட்டு நான் ஏசுகின்றேன் என்று யார் கூறினார்? என்று கேட்டார். எனவே பழக்கத்தின் காரணமாக மனிதனுக்கு, தான் என்ன கூறுகின்றான் என்ற உணர்வே இல்லாமல் போய் விடுகின்றது. சிலருக்கு தங்களது பழக்கத்தின் காரணமாக அவர்கள் எத்தகைய நிலையை அடைந்து விடுகின்றனர் என்றால் அவர்களுக்கு அதுபற்றிய உணர்வே இல்லாமல் போய் விடுகின்றது. அது அழிந்து விடுகின்றது. ஆனால் மனிதன் முயற்சி செய்தால் அந்த அழிந்து போன உணர்வுகளை மீண்டும் உருவாக்க அவனால் முடியும். அவற்றை

சீர்திருத்தவும் முடியும். எவ்வாறிருப்பினும், செயல் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருப்பதில் பழக்கவழக்கத்திற்குப் பங்கு இருக்கின்றது.

இன்றைய நாட்களில் நாம் பார்க்கின்றோம். வீணான, அநாவசியமான படங்களைப் பார்ப்பதில் பேரார்வம் இருந்து வருகிறது. மக்கள் இன்டர்நெட்டில் அவற்றைப் பார்ப்பதில் ஆர்வம் உடையவர்களாய் இருக்கின்றனர். சிலருக்கு போதைப் பொருள்களைப் பயன்படுத்துவது போன்றே இவ்விசயத்திலும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் உணவு உண்ண மாட்டார்கள். அமர்ந்து கொண்டே படங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். இன்டர்நெட் மூலம் படங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். துக்கம் வந்தாலும் கூட அதை பொருட்படுத்தாமல் படங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். குழந்தைகளைப் பற்றியும் மனைவியைப் பற்றியும் அவர்களுக்கு கவலையில்லை. இத்தகைய மக்களும் உள்ளனர். ஆக இந்தப் பழக்கம் செயல் சீர்திருத்தத்திற்குப் பெரும் தடையாக இருப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

செயல் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருக்கின்ற **ஐந்தாவது காரணமாக,** மனைவி மக்கள் உள்ளனர். இவர்கள் செயல் சீர்திருத்தத்தின் வழியில் தடையாக நிற்கின்றனர். சில சமயங்களில் மனிதனுக்கு தனது மனைவி மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் செயலளவில் அவனை சோதனையில் ஆழ்த்தி விடுகின்றது. உதாரணமாக, எவரது செல்வத்தையும் விழுங்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் போதனையாகும். ஒருவர் இன்னொருவரிடம் ஒரு தொகையை அமானத் ஆக கொடுத்து வைத்திருந்தால் அதற்கான எந்த சாட்சியமும் அவரிடம் இல்லாமல் இருந்தால் எவரிடம் அமானத் வைக்கப்பட்டுள்ளதோ அவர் சில சமயங்களில் தனது மனைவி மக்களுக்கு ஏற்படும் தேவைகளின் காரணமாக அதை நிறைவேற்றுவதற்காக அவரது எண்ணத்தில் களங்கம் ஏற்பட்டு விடுகின்றது. நிய்யத் தீயதாக ஆகி விடுகின்றது. எனது மனைவி என்னிடம் கொஞ்சம் தொகையை வழங்கும்படி கூறியிருந்தார். அந்த சமயத்தில் என்னிடம் தொகை இருக்கவில்லை. அதனால் நான் அவனது கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் ஆகி விட்டது. அல்லது எனது பிள்ளைகள் இந்த ஒரு பொருளை வாங்குவதற்காக என்னிடம் பணம் கேட்டார்கள். நான் அதனை அவருக்கு கொடுக்க முடியவில்லை. இப்போது எனக்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. நான் இந்த தொகையை அபகரித்து எனது மனைவி மக்களின் இந்த கோரிக்கையை நிறைவேற்ற முடியும் அல்லது பிள்ளைகளுக்கு நோய் வந்து விட்டதால் சிகிச்சைக்காக பணம் தேவைப்படுகிறது. பணம் இல்லை. எனவே அமானிதமாக என்னிடம் வைக்கப்பட்டுள்ள இந்த தொகையிலிருந்து பலன் அடைந்தவாறு இந்த தொகையைச் செலவு செய்தவாறு நான் அவர்களது சிகிச்சைக்காக இதனை செலவு செய்வோம். இந்த தொகையை என்னிடம் தந்தவருக்கு நான் இதை திருப்பிக் கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை பிறகு பார்த்துக் கொள்வோம் என்று அவர் நினைக்கின்றார்.

ஆக இவை அனைத்தும் நம்பி ஒப்படைக்கப்பட்டவை தொடர்பாக இஸ்லாம் வழங்கியுள்ள போதனைக்கு எதிரானவையாகும். உங்களிடம் அமானிதமாக ஒரு பொருள் வைக்கப்பட்டால் அதற்கான சாட்சியம் இருந்தாலும் இல்லா விட்டாலும், அதற்கான ஆதாரம் இருந்தாலும் இல்லா விட்டாலும், எந்நிலையிலும் நீங்கள் அதனைக் கொடுத்தவரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். சில நேரங்களில் சிலர் தங்களது பிள்ளைகளின் பலனுக்காகவும், அவர்களுக்காக சொத்துக்களை உருவாக்குவதற்காகவும் பருவ வயதை அடையாத அநாதைகளின் உரிமைகளைப் பறிக்கின்றனர். அல்லது ஓரளவு அவர்களுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றனர். இந்த உதாரணங்கள் பொருளாதார விவகாரங்களுடன் மட்டும் தொடர்புடையதல்ல. இந்த சுதந்திரமான, முன்னேற்றத்தை விரும்புகின்ற சமூகத்தில் குறிப்பாகவும் இந்த விசயம் இருக்கின்றது. ஏழை நாடுகளிலும் இது போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. சில பெற்றோர்கள் குழந்தைகள் மீது வைத்துள்ள அதிகமான நேசத்தின் காரணமாக அவர்களை இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செயல்பட வைப்பதில்லை. இதுபோன்ற விசயங்கள் நமது அஹ்மதி சமுதாயத்திலும் தென்படுகின்றன என்பதை நான் வருத்தத்துடன் கூறிக் கொள்கின்றேன். ஒருவர் மற்றவரிடம் நம்பி ஒப்படைத்தவற்றை அவர் அபகரித்துக் கொண்டார். ஒருவர் மற்றவரை பண விசயத்தில் ஏமாற்றி விட்டார். இன்னொருவர் அநாதைகளின் செல்வத்தை வைத்திருந்து அதற்கான உரிமையை முழுமையாகச் செலுத்தவில்லை. ஜமாஅத்தின் நீதித்துறையிடம் இது போன்ற விவகாரங்கள் வருகின்றன. புகார்கள் வருகின்றன. பணக்கார நாடுகளில் வசிக்கின்ற ஒருவர் தனது மகளை பாகிஸ்தானில் மணமுடித்துக் கொடுக்கின்றார். தனது மருமகனிடம் முதலிலேயே, நான் எனது மகளை மிகவும் செல்லமாக வளர்த்துள்ளேன். அவளுக்கு எல்லா விதமான சுதந்திரமும் உண்டு. அவள் மீது எவ்வகையிலும் அடக்குமுறை இருக்கக் கூடாது என்று கூறி விடுகின்றனர். மகளது மூளையும் கூட தந்தை இவ்வாறு கூறியதைக் கேட்டு அதற்கேற்பவே அவளை சிந்திக்க வைக்கும். கணவனை ஒரு பொருட்டாகவே அவள் கருதமாட்டாள்.

ஆனால் மனைவி கணவனுக்குரிய உரிமைகளைச் செலுத்த வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். வீட்டின் பொறுப்புகளை அவள் நிர்வகிக்க வேண்டும். இது அவளது கடமையாகும். சில நேரங்களில் இளைஞர்கள் பாகிஸ்தானிலிருந்து பெண்களை மணமுடித்துக் கொண்டு வருகின்றனர். பிறகு அந்த பெண்களைக் கொடுமையின் ஆட்டுரலில் அரைத்துக் கொண்டே செல்கின்றனர். அந்த இளைஞர்களின் பெற்றோர்களும் பெண் இந்த அனைத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். எங்கு பிள்ளைகளின் மீது இந்த பெற்றோர்கள் வைத்துள்ள அளவு கடந்த நேசமானது அப்பெற்றோர்களின் செயல் அளவிலான நிலைமையை அழித்து விடுமோ அங்கு அது சில குடும்பங்களையும் சீர்குலைத்து விடுகின்றது. மனைவி மக்கள் காரணமாக செயல் சீர்திருத்தத்தில் ஏற்படும் தடைகளுக்கு எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. பல செயல்களும் மனிதனின் பலவீனத்தை வெளிப்படுத்தக் கூடியவைகளாக இருக்கின்றது. ஏனென்றால் மனைவி மக்கள் மீது அளவு கடந்த பரிவு காட்டுவது அல்லது அவர்களுக்குள்ள தேவைகளை நிறைவேற்றுவது இதற்குக் காரணமாக இருக்கின்றது. இவர்கள் மீதுள்ள அன்பு நற்செயல்களைச் செய்வதிலிருந்தும் இவர்களை தடுத்து விடுகின்றது. பிள்ளைகள் மீதுள்ள நேசத்தால் பிள்ளைகளுக்குச் சாதகமாக பொய் சாட்சியங்கள் கூறப்படுகின்றன.

ஏழை நாடுகளில் மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் இந்த நோய் பொதுவானதாக ஆகி விட்டது. அதாவது அதிகாரிகள் லஞ்சம் வாங்குகின்றனர். தங்களுக்காக மட்டும் அவர்கள் லஞ்சம் வாங்குவதில்லை. பிள்ளைகளுக்காகவும் அவர்களுக்காக சொத்துக்களை உருவாக்குவதற்காகவும் அச்சொத்துக்களை அந்த பிள்ளைகளுக்காக விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் லஞ்சம் வாங்குகின்றனர். அல்லது பிள்ளைகளை கல்வி கற்க வைப்பதற்காக கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படும் பள்ளிகளில் அவர்களைப் படிக்க வைக்கின்றனர். அதற்காக லஞ்சம் வாங்குகின்றனர். எனவே மனிதனது செயல்களைச் சீர்திருத்துவதில் உணர்வுகளும் உணர்வுகளைத் தூண்டுகின்ற உறவுகளும் தடையாக வந்து நிற்கின்றது. இறைவன் மீதுள்ள அன்பு எத்தகு உயர்வான தரத்தில் இருக்க வேண்டும் என்றால் இந்த மிகுதியான அன்பிற்கு எதிரில் மனைவி மக்கள் மீதுள்ள அன்பு, அவர்களுக்காக உருவாகின்ற உணர்வுகள் மிக சாதாரணமான தகுதியை உடையதாக ஆகி விட வேண்டும். மனிதன் இதன் தாக்கங்களிலிருந்து விடுபட்டு முற்றிலும் சுதந்திரமானவனாக ஆகிவிட வேண்டும். இது இல்லாமல் செயல் அளவிலான சீர்திருத்தம் சாத்தியமற்றதாகும்.

செயல் அளவிலான சீர்திருத்தத்திற்கு தடையாக இருக்கும் **ஆறாவது காரணம்,** மனிதன் தொடர்ந்து நிரந்தரமாக தன்னை கண்காணிக்காமல் இருப்பதாகும். அதாவது செயல் பற்றிய எண்ணம் எப்போதும் அவனிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் செயல் சீர்திருத்தம் ஏற்பட முடியும். ஒவ்வொரு செயலையும் செய்யும் போதும் இந்த செயலின் விளைவு நல்லதாக இருக்குமா? அல்லது தீயதாக இருக்குமா? இந்த செயலைச் செய்ய எனக்கு அனுமதி இருக்கின்றதா? இல்லையா? திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள 700 கட்டளைகளுக்கேற்ப செயலாற்றுபவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றிற்கேற்ப நான் செயல்படுகின்றேனா? இல்லையா? அல்லது இதை விட்டு தூரம் விலகிச் செல்கிறோமா? என்று சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக, நேர்மையாக பணியாற்ற வேண்டும் என்பது ஒரு முக்கிய கட்டளையாகும். ஒரு கடைக்காரருக்கும் இந்த கட்டளை இருக்கின்றது. பணியில் இருக்கின்ற ஒரு தொழிலாளிக்கும் இந்த கட்டளை இருக்கின்றது. தத்தமது வட்டத்தில் ஒவ்வொருவருக்கும் நேர்மையைக் கடைபிடியுங்கள் என்ற இந்த கட்டளை இருக்கின்றது. ஒரு கடைக்காரர் இருக்கின்றார். அவர் முன்னால் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளையை நிறைவேற்ற வேண்டிய பல சந்தர்ப்பங்கள் வரும். ஒன்றும் தெரியாத ஒரு நபர் பொருள் வாங்குவதற்காக வருகின்றார். அந்த நபருக்கு அந்த கடைக்காரர் குறைந்த தரத்திலுள்ள ஒரு பொருளைக் கொடுத்து விட்டு அதற்கு அதிகமான தொகையை அவரிடம் வசூல் செய்கின்றார். அல்லது அவர் கூறும் தொகைக்கு தரும் பொருளின் எடையை குறைத்து விடுகின்றார். பிறகு அதை விற்கின்றார். இத்தகைய நோய் இந்த நாடுகளில் குறைவாக இருக்கின்றது. ஆனால் ஏழை நாடுகளில் இந்த நோய் மிகவும் அதிகமாக இருக்கின்றது. எனவே பொருளை வாங்குகின்ற ஒவ்வொருவருக்கும் இதைப் பற்றிய அறிவு குறைவாக இருப்பதால் அதிலிருந்து நான் பலனடைய வேண்டும் என்று ஒருவர் நினைக்கின்றார். பொருள் வாங்குகின்ற ஒவ்வொருவருக்கும் பொருளைக் கொடுக்கும் போது அதனை நிறுத்தும் எடையைக் குறைத்து விட்டால் மாலை நேரத்திற்குள் என்னால் இவ்வளவு சேமிக்க முடியும் என்று ஒருவர் யோசிக்கின்றார். சில நேரங்களில் பொருளை வாங்குபவரது அத்தியாவசிய தேவை மற்றும் அவரது கட்டாய சூழ்நிலை ஆகியவற்றைப் பார்த்து அசல் இலாபத்தை விட பல மடங்கு அதிகமாக அவரிடமிருந்து இலாபத்தைப் பெறுகின்றனர். இது வியாபாரத்தில்

மேற்கொள்ளப்பட வேண்டிய நல்லொழுக்கத்திற்கு மாற்றமான செயலாகும். ஆனால் இஸ்லாம் இதனை கடுமையாக கண்டிக்கிறது.

இலாபம் ஈட்டுவது தொடர்பாக இதையும் நான் கூறுவேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் ரப்வாவில் மக்களை குடியமர்த்திய சமயத்தில் அங்குள்ள கடைக்காரர்களிடம் நீங்கள் இலாபம் குறைவாக பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்களிடம் பொருளை வாங்குபவர்கள் அதிகமாக வருவார்கள் என்று கூறினார்கள். ஆனால் என்னிடம் இப்படிப்பட்ட சில புகார்கள் வந்துள்ளன. அல்லது வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ரப்வாவிலுள்ள கடைக்காரர்கள் எந்த அளவு அதிகமாக இலாபம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர் என்றால் மக்கள் சினியோட்டிற்குச் சென்று பொருள்களை வாங்குகின்றனர் என்று எழுதியுள்ளனர். அதாவது நம்மவர்களுக்குப் பதிலாக அந்நியர்களிடம் அஹ்மதிகளின் ரூபாய்கள் செல்கின்றது. ரப்வாவிலுள்ள அஹ்மதி கடைக்காரர்கள் தான் இதற்கு பொறுப்பாளியாக இருக்கின்றனர்.

எனவே இவ்வகையிலும் நமது அஹ்மதி கடைக்காரர்கள் சிந்திக்க வேண்டும். மேலும் தங்களை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ரப்வாவில் மட்டுமின்றி அஹ்மதிகள் எங்கிருந்தாலும் ஓர் அஹ்மதி கடைக்காரரின் தரம் எப்போதும் சிறப்பாக இருக்க வேண்டும். அவர்கள் பொருள்களை நிறுக்கும் போது எடை முழுமையாக இருக்க வேண்டும். ஏதாவதொரு பொருளில் குறை இருந்தால் அதனை வாங்குபவருக்கு அந்த குறையைக் கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். இலாபம் ஈட்டுவது குறைவாகவும் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். இதனால் இன்சா அல்லாஹ் வியாபாரத்தில் பரக்கத் ஏற்படும். குறைவு ஏற்படாது. இவ்வாறே ஒவ்வொரு களத்திலுமுள்ள அஹ்மதிகளும் தங்களது நேர்மையின் அழகை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக ஒவ்வொரு சமயத்திலும் நான் படித்த அந்த கட்டளையை நாம் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் செயல் சீர்திருத்தம் ஏற்பட முடியும். எல்லா நேரமும் எனது செயல் சீர்திருத்தத்திற்காக நான் இந்த இந்த பணிகளைச் செய்வேன் என்பதை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறே மற்ற தீமைகளும் உள்ளன. உதாரணமாக ஒவ்வொரு விசயம் தொடர்பாக பேசுகின்ற போது எனது இந்த சொல்லில் தவறாக நான் எதையாவது கூறியுள்ளேனா என்று பார்க்க வேண்டும். பிறகு கடைக்காரர்களின் பொறுப்பற்ற நிலை தொடர்பாக உதாரணமும் இருக்கின்றது. ஒரு கடைக்காரர் தொழுகை நேரம் வந்ததும் தொழுவதற்காக சென்று விடுகின்றார். மற்ற கடைக்காரர் நான் கடையை திறந்து வைத்திருப்பேன். அதன் மூலம் இந்த சமயத்தில் எந்த அளவு பொருள் வாங்குபவர் வந்தாலும் அவர் எனது கடைக்குத்தான் வருவார் என்று அவர் நினைக்கின்றார். ஒருபுறம் நல்ல செயலைக் கருத்தில் கொள்பவர் தொழுவதற்காக தயாராகிக் கொண்டிருக்கின்றார். மறுபுறம் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் இதனை பொருட்படுத்தாமல் தங்களது உலகப் பலன்களைப் பார்ப்பதற்காக இலாபம் ஈட்டுவது தொடர்பாக சிந்திக்கின்றனர். ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு முன்பும் நல்ல செயல்களின் சீர்திருத்தம் பற்றி யோசிப்பதற்குப் பதிலாக அவர்களது எண்ணங்கள் உலகப் பலன்கள் பக்கமே செல்கின்றன. அவர்கள் அதைப் பற்றியே சிந்தனை செய்கின்றனர்.

ரப்வாவிலுள்ள கடைக்காரர்கள் தொடர்பாக மீண்டும் இதை நான் கூறுகின்றேன். ஒருமுறை எனக்கு புகார் வந்தது. அதாவது தொழுகை நேரத்தில் அவர்கள் கடைகளை அடைக்காமல் இருக்கின்றனர். எவ்வாறிருப்பினும், அவர்களிடமிருந்து இப்போது ரிப்போர்ட் கிடைத்திருக்கின்றது. அதில் இவர்கள் எல்லாரும் வருங்காலத்தில் இதனை செயல்படுத்துவோம் இன்சா அல்லாஹ் என்று கூறியுள்ளனர். இதற்கேற்ப செயல்படும் மக்களாக அல்லாஹ் இவர்களை ஆக்குவானாக!

இவ்வாறே காதியானிலுள்ள கடைக்காரர்கள் உள்ளனர். இன்றைய நாட்களில் ஆண்டு மாநாட்டின் காரணமாக அங்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். அவர்களும் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். பொருளை வாங்குபவர் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளார் என்பதற்காக நீங்கள் உங்களது கடமைகளை மறந்து விட முடியாது. தொழுகை நேரத்தில் இவர்கள் தங்கள் கடைகள், ஸ்டால்கள் ஆகியவற்றை அடைத்து விட வேண்டும். உலகில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு அஹ்மதியும் கடமையானவற்றை நிறைவேற்றுவதற்காக மிகுதியான கவனத்துடன் செயல்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

நற்செயல்களின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துவது என்பதற்கான உதாரணம் மிகவும் வேகமாக செல்லக் கூடிய குதிரையில் சவாரி செய்பவருக்கு ஒப்பானதாக இருக்கின்றது. அந்த குதிரையில் அவர் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் உட்காராமல் இருந்தால் அந்த குதிரை அவரை கீழே தள்ளிவிடும். எனவே

நம்பிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு சமயத்திலும் தங்கள் செயல்கள் மீது பார்வை இருந்து வர வேண்டும். அவ்வாறு பார்வை வைக்க வேண்டும். ஒரு நொடிப்பொழுது கூட அவர்கள் முன்னெச்சரிக்கையின்றி செயல்படுவதாக இருந்தால் ஒரு நம்பிக்கையாளருக்கு இருக்க வேண்டிய உயர் தரத்திலிருந்தும் அவர் கீழே விழுந்து விடுவார். அவரது செயல், சீர்திருத்தமும் ஏற்படாது.

எனவே ஒவ்வொரு விவகாரத்திலும் ஒவ்வொரு சமயத்திலும் பார்வை வைத்தால் தான் செயல் சீர்திருத்தத்தின் பக்கம் ஒவ்வொருவரும் அடியெடுத்து வைக்க முடியும். தீமைகளின் பக்கம் மனிதன் ஒருமுறை குனிந்து விட்டால் பிறகு அதில் அவன் மூழ்கி விடுகின்றான். தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கான மனிதன் ஒவ்வொரு பணியின் மீதும் பார்வையைச் செலுத்தியவாறு ஒரு திரையின் பின்னால் வந்து விடுகின்றான். இந்த திரையை அகற்றி விட்டால் ஒரு பலவீனத்திற்குப் பிறகு இன்னொரு பலவீனம் அவர் மீது வெற்றி பெற்று விடுகின்றது.

பெண்களுக்கும் நான் ஒரு உதாரணத்தைக் கூறுவேன். பர்தாவைப் பேணுதல், வெட்க உணர்வு ஆகியவை ஒருமுறை முடிந்து போய் விட்டால் பிறகு விசயம் இன்னமும் பெரிதாகி விடுகின்றது. சில வயதில் பெரிய பெண்கள் பாகிஸ்தானிலிருந்து ஆஸ்திரேலியாவிலுள்ள பிள்ளைகளைப் பார்ப்பதற்காக புதிதாக வந்த போது தங்கள் பிள்ளைகள் பர்தா அணியாமல் இருப்பதைப் பார்த்து பர்தா அணியுமாறு அவர்களிடம் கூறினார்கள். குறைந்தபட்சம் வெட்கத்தை வெளிப்படுத்துகின்ற உடையை அணியுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு பர்தா அணியாமல் இருக்கின்ற சில பெண்கள் இங்கு பர்தா அணிவது மிகப்பெரும் குற்றமாகும் என்று கூறியுள்ளனர். பர்தா அணியுமாறு சொன்ன பெண்ணும் கூட பர்தா அணிவதை விட்டு விட்டார். அவருக்கு வாழ்நாள் முழுவதும் பர்தா அணிகின்ற பழக்கம் இருந்திருக்கின்றது. ஆனால் உண்மை என்னவென்றால் அங்கு அப்படிப்பட்ட எந்த சட்டமும் இல்லை. அது குற்றமும் அல்ல. அதன் பக்கம் எவரும் கவனம் செலுத்துவதுமில்லை. Fashion –ற்காக மட்டும் சில இளம் பெண்களும் சிறுமிகளும் பர்தா அணிவதை விட்டு விட்டனர்.

திருமணம் நடந்து பாகிஸ்தானிலிருந்து வந்த ஒரு பெண் எனக்கு எழுதிய கடிதத்தில் வலுக்கட்டாயமாக என்னையும் பர்தா அணியாமல் இருக்கும்படி செய்து விட்டனர். அல்லது சுற்றுச்சூழலின் தாக்கத்தின் காரணமாக நானும் இவர்களது வலையில் வீழ்ந்து விட்டேன். பர்தா அணிவதை விட்டு விட்டேன் என்று எழுதியுள்ளார். நீங்கள் அங்கு சுற்றுப் பயணத்தில் சென்ற போது பெண்கள் மத்தியில் சொற்பொழிவு நிகழ்த்தினீர்கள். பர்தா தொடர்பாகவும் கூறினீர்கள். அப்போது நான் புர்கா அணிந்திருந்தேன். இன்று வரை அதில் நிலைத்து நிற்கின்றேன். இதில் நிலைத்து நிற்க முயற்சியும் செய்கின்றேன். துஆவும் செய்கின்றேன் என்று எழுதியுள்ளார்.

திருக்குர்ஆன் பர்தா தொடர்பாக கூறுகின்ற கட்டளையை மீண்டும் மீண்டும் தங்களது எண்ணங்களில் அலசிப் பார்க்காமல் இருப்பதன் காரணமாகவே பர்தா களையப்படுகின்றது. இதைப் பற்றி வீடுகளில் இவர்கள் பேசுவதுமில்லை. எனவே செயல் சீர்திருத்தத்திற்காக மீண்டும் மீண்டும் நன்மைகளைப் பற்றியும் தீமைகள் பற்றியும் எடுத்துக் கூறிக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

செயல் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருக்கின்ற **ஏழாவது காரணம்,** மனிதத் தொடர்புகளும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் விதமும் எல்லாவற்றையும் மிகைத்து நிற்கின்றது. அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தில் குறைவு ஏற்பட்டு விட்டது. சில நேரங்களில், பேராசை, நட்பு ரீதியிலான தொடர்புகள், உறவினர்கள் சண்டை போடுவது, காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு ஆகியவை இந்த நற்செயல்களின் சிறந்த தாக்கத்தை வெளிப்படுத்த விடுவதில்லை. அமானத் தொடர்பான உதாரணத்தை நான் கூறியிருந்தேன். மீண்டும் அதை நான் கூறுகின்றேன். அமானத் தொடர்பாக இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான் என்ற கோணத்தில் அவர்கள் பார்க்காமல் இந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் இந்த அமானத் தன்னிடம் இருப்பதால் அவரது நண்பர்கள் மற்றும் எதிரிகள் மீது என்ன தாக்கம் ஏற்படுகின்றது என்று அவர் சிந்திக்கின்றார்.

இவ்வாறு உண்மை பேசுதல் என்பதையும் இறைவன் எனக்கு இதுபற்றி கட்டளையிட்டுள்ளான் என்ற கோணத்தில் பார்க்காமல் இந்த உண்மையைக் கூறுவதால் தனது நண்பர்களுக்கும், தனக்குப் பிரியமானவர்களுக்கும் எவ்வித இழப்பும் ஏற்பட்டு விடக் கூடாது என்று அவர்கள் சிந்திக்கின்றனர். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எதிராக சாட்சி கூறுவதற்கான காரணம் இந்த சமயத்தில் அவன் எனக்கு இழப்பை ஏற்படுத்தினான். எனவே இன்னும் எனக்கு பழிவாங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அதனால் நான் அவனுக்கு எதிராக சாட்சி கூற வேண்டும் என்று கருதுவதேயாகும்.

எனவே செயல்களிலுள்ள பலவீனங்கள் இறைவன் மீதுள்ள அச்சம் இல்லாமல் ஆகிவிடும் போது தான் ஏற்படுகின்றது. எனவே, அல்லாஹ்வுக்கு அஞ்சியவாறு நீங்கள் உங்களுக்கு எதிராகவோ, உங்களுக்குப் பிரியமானவர்களுக்கு எதிராகவோ, பெற்றோர்களுக்கு எதிராகவோ சாட்சி கூற வேண்டியது வந்தாலும் சாட்சி கூறுங்கள் என்ற இறை கட்டளையைக் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். உண்மைக்கு எப்போதும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

செயல் சீர்திருத்தத்திற்குத் தடையாக இருக்கின்ற **எட்டாவது காரணம்** எதுவரை குடும்பங்களில் சீர்திருத்தம் ஏற்படாமல் இருக்கின்றதோ அதுவரை செயலில் சீர்திருத்தம் ஏற்படுவது மிகவும் கடினமானதாகும். உதாரணமாக, நேர்மையைக் கடைபிடிப்பதில் எதுவரை மனைவி மக்கள் நம்முடன் முழுமையாக ஒத்துழைப்பு தருவதில்லையோ அதுவரை அது முழுமையடையாது அல்லது அதன் தரத்தை நிலைநாட்ட முடியாது. வீட்டிலுள்ள குடும்பத் தலைவர் எவ்வளவு தான் ஹலாலான செல்வத்தை சம்பாதித்தாலும் அந்த குடும்ப தலைவரது மனைவி ஏதாவதொரு வழியில் பக்கத்து வீட்டுக்காரரின் செல்வத்தைக் கொள்ளை அடிப்பவராகவும் அல்லது வேறு ஏதாவதொரு வழியில் பிறருக்கு இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தால் அல்லது அவரது மகன் லஞ்சம் வாங்கியதன் மூலம் கிடைத்த செல்வத்தை வீட்டிற்குக் கொண்டு வருகின்றார் என்றால் அந்த வீட்டின் உணவு ஹலாலாக இருக்க முடியாது.

குறிப்பாக எந்த குடும்பங்களில் வீட்டிலுள்ள அனைவரும் ஒன்றாக கூட்டுக் குடும்பமாக இருக்கின்றார்களோ அங்கு வீட்டிலுள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து அவர்களது செயல்களில் சிறப்பான நிலையை ஏற்படுத்த முயற்சி செய்யாமல் இருந்தால் ஏதாவதொரு சமயத்தில் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரிடம் தனது தாக்கத்தை ஏற்படுத்தி விடுவார். மனைவி நல்லவராக இருந்து கணவர் ஹலாலான ரிஸ்கை சம்பாதிக்க –வில்லையென்றால் அதன் விளைவாகவும் வீட்டில் தீய தாக்கம் ஏற்படும். தந்தைக்கு தொழுகைகளின் பக்கம் கவனம் இருந்து அவர் குழந்தைகளுக்கு அதுபற்றி கவனமூட்டியிருந்தால் அல்லது தந்தை அதுபற்றி கூறியும் தாய் அதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்தால், அவ்வாறே தாய் கவனமூட்டியும் தந்தை தொழாதவராகவும் இருந்தால் பிள்ளைகள் அதனைப் பின்பற்றி செல்வார்கள். சென்ற குத்பாவிலும் நான் இந்த உதாரணத்தைக் கூறியிருந்தேன்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான்:**

*(66:7)* قُوْٓا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ نَارًا

நீங்கள் உங்களை மட்டும் நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளாதீர்கள். உங்களது மனைவி மக்களையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள். நீங்கள் உங்களை மட்டும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்வது போதுமானதல்ல. மாறாக மற்றவர்களையும் காப்பாற்றுவது கடமையாகும். மற்றவர்களை நீங்கள் காப்பாற்றாமல் இருந்தால் ஒருநாள் அவர்கள் உங்களையும் தங்களுடன் சேர்த்து மூழ்கடித்து விடுவார்கள். எனவே செயலில் சீர்திருத்தம் ஏற்பட முழு வீடும் சீர்திருந்துவது அவசியமானதாகும். இதற்காக அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். குடும்பத் தலைவருக்கு இதில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான பங்கு இருக்கின்றது. பெரும்பாலும் மனைவி மக்கள் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்பது அல்லது அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றிய உணர்வு அல்லது பொருத்தமில்லாத இடங்களில் அவர்கள் மீது அன்பு காட்டுவது ஆகியவை தனக்கும் தனது வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏற்படும் சீர்திருத்தத்திற்கும் தடையாக இருக்கின்றது.

இந்த எட்டு காரணங்களைத் தவிர வேறு காரணங்களும் இருக்கலாம். இவை சில முக்கிய விசயங்களாகும். இவை செயல் சீர்திருத்தத்திற்கு தடையாக இருக்கின்றது. அனைத்து விசயங்கள் பற்றியும் நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் அவை இந்த எட்டு விசயங்களுக்குள் வந்து விடும். சுருக்கமாக கூறுவதென்றால் செயல்கள் தொடர்பாக எத்தகைய தடைகள் உள்ளன என்றால் அது மனிதனை இறைவனின் வழியிலிருந்து அகற்றி விடுகின்றது. அவனது நெருக்கம் கிடைப்பதிலிருந்தும் விலக்கி அவனை மிகத் தொலைவில் கொண்டு எறிந்து விடுகிறது. நாம் நமது செயல்களை சீர்திருத்த விரும்பினால் இதன் பக்கம் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். கூறுவதால் மட்டும் சீர்திருத்தம் ஏற்பட முடியாது. எந்த வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் சீர்திருத்தம் ஏற்பட வாய்ப்புள்ளதோ அந்த வழிகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கு உதாரணம் கூறியுள்ளார்கள். ஐரோப்பாவில் ஒரு புகழ்பெற்ற சொற்பொழிவாளர் ஒருவர் இருந்தார். அவர் மிக உயர்வான தரத்திலுள்ள சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். சொற்பொழிவாற்றும் போது அவர் தமது தோள்களை மிகவும் வலுவாக அசைத்துக் கொண்டிருந்தார். மேலும்

கீழுமாக அதனை அசைத்துக் கொண்டிருந்தார். மக்கள் அவரிடம் நீங்கள் நன்றாக சொற்பொழிவாற்றுகின்றீர்கள். ஆனால் நீங்கள் உங்களது தோள்களை மேலும் கீழுமாக அசைப்பதால் மக்களுக்கு அதனால் சிரிப்பு வந்து விடுகின்றது என்று கூறினர். இந்தக் குறைபாட்டை அகற்றுவதற்கு அவர் முயற்சி செய்தார். ஆனால் அது அவரை விட்டு அகலவில்லை. இறுதியில் இதற்கான சிகிச்சையை அவர் எப்படி ஆரம்பித்தார் என்றால் இரண்டு வாள்களை அவர் மேல் கூரையிலிருந்து தொங்க விட்டார். அந்த வாள்கள் அவரது உயரம் வரை எட்டியிருந்தது. தோள்கள் வரை எட்டியிருந்த அந்த வாள்களுக்கு கீழே நின்றவாறு அவர் தமது சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். எப்போது அவர் தோள்களை அசைத்தாலும் வாள் அவரது தோள்களில் பட்டது. அந்த வாள் சில நேரங்களில் அவரது இடப்புறத்திலும் அவரது வலப்புறத்திலும் பட்டது. இவ்வாறு சில நாட்கள் முயற்சி செய்த பிறகு இந்தப் பழக்கம் அவரிடமிருந்து அகன்று விட்டது. நல்ல செயல்களைச் செய்ய பழகுவதற்கு அத்தகைய வழிமுறையைப் பேண வேண்டிய தேவை இருக்கின்றது. இதன் காரணமாக வேறு வழியின்றி நல்ல செயல்களைச் செய்வதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. இதற்காக அனைவரும் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களும் முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். வீட்டிலுள்ள ஒவ்வொரு நபரும் இதற்காக முயற்சி செய்ய வேண்டியது அவசியமானதாகும். இந்த முயற்சியை நாம் தியாகம் செய்யாமல் செய்ய முடியாது. அந்த வழிமுறைகளைப் பின்பற்றி தீமைகளை விட்டு விடுவதற்காக துன்பங்களை சகிக்க வேண்டியது வந்தாலும் சகிக்கின்ற அந்த நிலையைப் பெறாமல் நாம் இதை செய்ய முடியாது. ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமானதாகும். தியாகங்கள் செய்ய வேண்டியது அவசியமானதாகும். உறுதியான உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறில்லையென்றால் நாம் நமது நோக்கங்களில் வெற்றி பெற முடியாது. அந்த மகத்தான நோக்கத்திற்காகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றினார்கள். அதாவது நமது கொள்கை மற்றும் நமது செயல் ஆகியவற்றின் சீர்திருத்தத்தை எந்த அளவு உயர்வான தரத்தில் நாம் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றால் எந்த ஒரு விரலும் நம்மை சுட்டிக் காட்டக் கூடாது.

நான் இதற்கு முன்னர் குத்பாக்களில் கூறியிருந்தது போன்றே சந்தேகமின்றி கொள்கையின் களத்தில் நாம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளோம். அந்த கொள்கைகளை நாம் ஜமாஅத் தரப்பிலிருந்தும் எதிரிகள் முன்னால் எடுத்து வைக்கும் போது மிகவும் கடுமையாக அவர்கள் அதனை மறுத்து வந்தனர். இன்று சில எதிரிகளும் கூட அந்த விசயங்களை ஏற்றுக் கொள்கின்றார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு செல்லவில்லை அல்லது அவர் இறங்கப் போவதில்லை என்று கூறுகின்ற முஸ்லிம்கள் இருக்கின்றனர். இதைக் கூறி இதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு என்ன காரணம் இருந்தாலும் அவர்கள் அறியாமலேயே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகள் அவர்களது வாயை அடைத்து அவர்கள் இந்த விசயங்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்திருக்கின்றது.

இதைப் போன்றே ஜிஹாது தொடர்பாக இப்போது சில பெரும் பெரும் ஆலிம்கள் தங்களது கருத்தைக் கூறும்போது இப்போது ஜிஹாது என்ற பெயரில் என்னவெல்லாம் நடக்கின்றதோ அது தீவிரவாதமாகும். அது அனுமதிக்கப்பட்டதல்ல. இஸ்லாம் இதற்கு அனுமதி வழங்கவில்லை என்று கூறியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் விரும்புகின்ற எந்த ஆதாரங்களை அவர்கள் தந்தாலும் அஹ்மதிய்யத்தின் போதனைகள் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் நாம் நமது செயலைப் பார்க்கும் போது செயல் விசயத்தில் நம்மிடம் கவனக்குறைவு இருக்கின்றது. பலவீனம் இருக்கின்றது. எந்த ஆன்மாவிற்கு ஏற்ப நாம் பணி செய்து உலகிற்கு ஒரு முன்மாதிரியைக் காட்ட முடியுமோ, அதன் பிறகு, எந்தவொரு நபரும் நமது ஜமாஅத்திற்குள்ள சிறப்பையும் மேன்மையையும் மறுக்காமல் இருப்பாரோ அத்தகைய ஆன்மா நம்மிடம் இதுவரை உருவாகவில்லை. செயல் சீர்திருத்தம் தொடர்பாக இஸ்லாம் கூறியுள்ள அந்த போதனைகளுக்கேற்ப இதுவரை நாம் செயல்படவில்லை.

மாறாக பெரும்பாலான நேரங்களில் அந்நியர்களது சிறு சிறு விசயங்களைப் பின்பற்றிச் சென்றவாறு அவர்களின் பக்கம் நாம் சாய்ந்து விடுகின்றோம். இதுபற்றிய சில உதாரணங்களையும் நான் தந்துள்ளேன். அந்நியர்களிடம் நமது தாக்கத்தை ஏற்க வைப்பதற்குப் பதிலாக அவர்களைக் காப்பி அடிப்பவர்களாக நாம் ஆகிவிட்டோம். சில இடங்களில் செயற்களத்தில் நமக்கு வெட்கப்பட வேண்டியது வருகின்றது. எனவே செயற்களத்தில் வெற்றியைப் பெற வேண்டியது அவசியமானதாகும். எந்த தண்ணீர் மூலமாக நாம் இந்தக் காலத்தில் அருள்களைப் பெற்றோமோ அதனை நீங்கள் வீணாக்காமல் இருப்பது அவசியமானதாகும். அவற்றை அந்த நதிகள் மூலமாக சேகரித்து வையுங்கள். அது பூமியைச் செழிப்பாக வைத்திருப்பதில் முக்கியமான பங்கை வசிக்கின்றது. இங்குமங்கும் ஓடி விடுகின்ற தண்ணீரைப் போன்று அதை வீணாக்கி விடாதீர்கள். நாம் நமது வரம்புகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். நமது செயல்

சீர்திருத்தத்திற்காக நம்மீது சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது நோக்கத்தைப் பெற முடியும். நாம் நமது கொள்கையின் சுவர்களை வலுப்படுத்துவதற்காக தியாகங்களைச் செய்துள்ளோம். உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்துள்ளோம். தியாகம் செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் செயல்களின் சுவர்களின் பக்கம் எந்த அளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அளவு நாம் கவனம் செலுத்தவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த விசயத்தை மிகவும் சிறந்த முறையில் எடுத்துக் கூறியுள்ளார்கள். சுருக்கமான சொற்களில் அவர்கள் கூறுகின்றார்கள்: இதுவரை கொள்கைகளின் இரண்டு சுவர்கள் இருக்கின்றன. செயல்களின் அந்த இரண்டு சுவர்களை இதுவரை நாம் கட்டவில்லை. இதன் காரணமாக திருடன் உள்ளே வந்து நமது பொருள்களை எடுத்துக் கொண்டு சென்று விடுகின்றான். ஆனால் எப்போது நாம், நாம் செய்யும் தியாகங்கள் மூலமாக நமது நான்கு சுவர்களையும் கட்டி அதனை முழுமைப்படுத்தி விடுவோமோ அதற்குப் பிறகு திருடன் நுழைவதற்கான எல்லா வழிகளும் அடைக்கப்பட்டு விடும்.

எனவே இன்று நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். நாம் நமது சொந்த விருப்பங்களையும் நமது மனைவி மக்களின் விருப்பங்களையும் தியாகம் செய்து விடுவோம். நமது செயல்களின் சுவர்கள் மேலும் வலுவடையும் வகையிலுள்ள ஒவ்வொரு தியாகத்தையும் நாம் செய்வோம். இந்த விசயத்தில் அந்நியர்களிடம் நாம் வெட்கப்படுபவர்களாக நாம் இருக்கமாட்டோம். அவ்வாறானால் நமது வீடுகளில் திருடன் நுழைந்து நமக்கு இழப்பை ஏற்படுத்தவும் முடியாது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **20.12.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456